1968 ஆகஸ்ட் 20]

வெளியிடப் படுகின்றன. அதற்குக்கூட சில மாநிலங்களில் எதிர்ப்பு வந்தபொழுது அந்த மாநில அரசு தகுந்த பாதுகாப்பு கொடுத்து அவைகளெல்லாம் சரிவர நடக்கும்படி பார்த்துக் கொண்டன.

**திரு. டி. மார்டின்** : ஸ்பீக்கர் சார், தமிழக அரசு எடுக்கக் கூடிய மாதாந்திர செய்திப்படங்களை இந்தியிலும், ஆங்கிலத்திலும் தயாரிப்பதற்கான செயற்குறிப்புகள் ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மான்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : இதுவரையிலே அந்த வகையான எண்ணம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் வர்கள் சொன்னபிறகு அந்தக் கருத்து தெரிய வருகிறது. இது சம்பந்தமாக பண விஷயத்தைக் கவனித்துத்தான் அதைச் செயல்படுத்த முடியுமா என்பதை யோசிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : விஞக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் அவருடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் மூவரும், திரு. சி. என். அண்ணா துரை அவர்களுடைய தலைமையின்கீழ் நடக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை என்று தெரிவித்து சட்டப் பேரவை விதி 55-ன்கீழ் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்திற்கு இந்தப் பேரவையின் அனுமதி இருக்கிறதா என்பதை, அறிந்து கொள்ள வேண்டும். அனுமதி வழங்க ஆதரவாயுள்ள உறுப்பினர்கள் எழுந்து நிற்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : ஆரம்பிப்பிட்ட எண்ணிக்கைக்குமேல், அனுமதி வழங்க ஆதரவாயுள்ள உறுப் பினர்கள் எழுந்து நின்றிருப்பதால் அனுமதி வழங்கப்பட்டிருக் கிறதென்று அறிவிக்கிறேன்.

பேரவை நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு பிளினரி அட்வைஸரி கமிட்டியைக் கூட்டி, என்றைக்கு இதன்மீது விவாதம் வைத்துக் கொள்ளலாம் என்பதை அறிந்து, பேரவைக்குத் தெரிவிக்கிறேன்.

அடுத்து 41-வது விதியின்கீழ், திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் பாண்டிச்சேரி கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : பேரவைத் தலைவரவர்களே, . .

திரு. சா. மெய்யப்பன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். 55-வது விதி, 2-வது பிரிவில், " If the Speaker is of the opinion that the motion is in order, he shall read the motion to the House and shall request those members who are in favour of leave being granted to rise in their places and if not less than twenty-one members rise accordingly, the Speaker shall intimate that leave is granted and that the motion will be taken on such day, not being more than ten days from the date on which leave is asked for, as he may appoint " என்பிருக்கிறது. ஆகையால் இது வந்த வுடன் பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியைக் கூட்டி, பிறகு சொல்ல வேண்டுமென்று இல்லையே. இதன்படி உடனேயே சொல்லிவிட வேண்டுமென்று இருக்கிறதே, அது சரியானதுதானு என்பதைத் தலைவர் அவர்கள் யோசிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உடனடியாகச் சொல்ல வேண்டுமென்பது இல்லை. பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியைக் கலந்துகொண்டு கூறுகின்றேன் என்று சொன்னேன். இதில் முறைகேடு ஒன்றும் இல்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவர் சொன்னபடி, அனுமதி கிடைத்துவிட்டது. இந்தத் தீர்மானம் என்ன எஸ்டாப்ளிஷ்மெண்ட் லேஷன் செய்து விட்டால் சபையின் நேரம் வீணாகாமல் இருக்கு மென்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மோஷன் என்று வருகிறதோ அன்று அந்தத் தீர்மானம் உறுப்பினர்களுக்கு அச்சடித்துக் கொடுக்கப்படும்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள் விளக்கம் கோரல்

THIRU K. VINAYAKAM : I have given an adjournment motion yesterday to the Secretary and I believe it must have reached the Speaker already. Now I have had a communication that he has disallowed it. But the understanding between the House and Speaker yesterday was that a member who desires to move an adjournment motion must be allowed to read the adjournment motion here and then immediately if the Speaker decides that it is not in order, he can give his ruling or in case he wants elucidation the Minister concerned can also give his views. That was the understanding reached between us. But I get a notice now. . . .

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள், கனம் சபாநாயகரவர்கள் அவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் உள்ள ஒரு சந்தேகத்தைக் கேட்கிறார்கள்.